பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 03 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த பாரதத்தின் இலக்குகளை அடைவதற்காக பல்வேறு திட்டங்களை நிதி ஆணையம் ஏற்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

3. உலகின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இந்தியா உருவாகி வருவதாக நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் திரு. சுமன் பெரி தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் ராமேஸ்வரம் பாம்பன் புதிய ரயில் பாலத்தை தெற்கு ரயில்வே உதவி பொதுமேலாளர் திரு. கௌசல் கிஷோர் தலைமையிலான குழு ஆய்வு மேற்கொண்டது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சென்னை அணி – மும்பை அணியையும், ஹைதராபாத் அணி - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த பாரதத்தின் இலக்குகளை அடைவதற்காக பல்வேறு திட்டங்களை நிதி ஆணையம் ஏற்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டில் பின்தங்கிய 109 மாவட்டங்களில் வேளாண் உற்பத்திப் பொருட்கள் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் விருப்பத்தின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, அறிவியல் மற்றும் புதுமைத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயிரத்து 333 புதிய ரயில்வே வழித்தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்து 242 வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த பயன்களை திருமதி நிர்மலா சீதாராமன் பட்டியலிட்டார்.

<<<<>>>>

பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப நிர்வாகத்தின் அனைத்து நிலைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாரத் மண்டபத்தில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உள்ளூர் நிர்வாகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

வெப்ப அலை மற்றும் நீர் பற்றாக்குறை ஆகியவை விவசாயத்தை அதிக அளவில் பாதித்து வருவதாகவும் அவர் கூறினார்.

பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப புதுமையான தீர்வுகளைக் கண்டறிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பருவநிலை மாற்றத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு அரசு நிர்வாகம் பல்வேறு நிலைகளில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

ஒரே தேசம் – ஒரே தேர்தல் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்றது.

இந்த முகாமில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் காண்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று நேரு யுவகேந்திரா அமைப்பின் மாநில இயக்குநர் திரு. செந்தில் குமார் தெரிவித்தார்.

இந்த முகாமில் கலந்துகொண்டதன் மூலம் தமக்கு புதிய சிந்தனைகள் ஏற்பட்டுள்ளதாக இளைஞர் ஒருவர் கூறினார்.

<<<<>>>>

உலகின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இந்தியா உருவாகி வருவதாக நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் திரு. சுமன் பெரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 31வது லால்பகதூர் சாஸ்திரி நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநிலங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் நிதி ஆயோக் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாக கூறினார்.

இதுகுறித்து 30 பயிற்சி முகாம்கள் நடைபெற்றுள்ளதாகவும், குறிப்பாக மீன்பிடித்தல், எல்லைப் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி அகியவற்றை உள்ளடக்கிய தகவல்கள்

தரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

முன்னர் இருந்த திட்டக் குழுவைப் போல் அல்லாது ஒவ்வொரு மாநிலத்திற்கு ஏற்ப திட்டங்களை நிதி ஆயோக் தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாநிலமும் தனது பொறுப்பை உணர்ந்து செயல்படும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சுமன் பெரி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் ராமேஸ்வரம் பாம்பன் புதிய ரயில் பாலத்தை தெற்கு ரயில்வே உதவி பொதுமேலாளர் திரு. கௌசல் கிஷோர் தலைமையிலான குழு ஆய்வு மேற்கொண்டது.

புதிய ரயில் பாலத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்க உள்ளதாக ரயில்வே அறிவித்துள்ள நிலையில், இந்த ஆய்வு நடைபெற்றது.

திறப்பு விழாவின் விரிவான ஏற்பாடுகள் குறித்தும், ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகேயுள்ள உள்ள ஆலய வளாகத்தில் மேடை அமைக்கப்பட்டு பிரதமர் உரையாற்ற உள்ள இடம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அந்த குழு ஆய்வு மேற்கொண்டது.

இந்த ஆய்வின்போது தெற்கு ரயில்வே மதுரைக் கோட்ட மேலாளர் திரு. சரத் ஸ்ரீவத்சவா, ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. சந்தீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

<<<<>>>>

நாட்டில் வெங்காய உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, ஏற்றுமதிக்கான 20 சதவீத வரி, வரும் ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி முதல் விலக்கிக்கொள்ளப்படுவதாக மத்திய நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தேவைகளைக் கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு செப்டம்பர் 13ஆம் தேதி வெங்காய ஏற்றுமதிக்கு 20 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய ரபி பருவத்தில் வெங்காய விளைச்சல் அதிகரித்துள்ளதையடுத்து, வெங்காய வரத்து சந்தையில் உயர்ந்துள்ளது.

இதனால் ஏற்றுமதி வரி விலக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோடை வெப்பம் தொடங்கியுள்ள நிலையில் தமிழகத்தில் தர்பூசணி மற்றும் வெள்ளரி சாகுபடி அதிகரித்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் இயற்கை உரங்களைக் கொண்டு அதிக அளவில் தர்பூசணி விளைவிக்கப்படுகிறது.

இதனால் உள்ளூர் மற்றும் பிற மாநிலத்தில் இருந்து வியாபாரிகள் அதிக அளவில் தர்பூசணி வெள்ளரிகளை வாங்கிச் செல்வதாக விவசாயி ஒருவர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சென்னை அணி – மும்பை அணியையும், ஹைதராபாத் அணி - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

ஹைதராபாத் - ராஜஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெறும் முதல் போட்டி ஹைதராபாதில் பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

சென்னை – மும்பை அணிகளுக்கு இடையே நடைபெறும் மற்றொரு போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்றிரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

<<<<>>>>

துருக்கியில் நடைபெற்ற உலகக்கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் பிரனதி நாயக் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – போர்ச்சுகலின் **Nuno Borges** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை கபடிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி 93-37 என்ற புள்ளிக் கணக்கில் வேல்ஸ் அணி வென்றது.

இன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவு இறுதியாட்டத்திலும் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியில் 19 தங்கப் பதக்கங்களுடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளத.

<<<<>>>>

பெங்களூருவில் நடைபெற்ற இந்திய ஓபன் ட்ரிபிள் ஜம்ப் போட்டியில் கேரளாவின் அப்துல்லா அபூபக்கர் தங்கப்பதக்கத்தையும், தமிழகத்தின் ப்ரவீன் சித்ரவேல் வெள்ளிப் பதக்கத்தையும், ஹரியானாவின் அசோக் யாதவ் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

**<<<<The End>>>>**